செ.வெ.எண்:834 நாள்:04.11.2020

# செய்தி வெளியீடு

## "நகர்ப்புற வீடுகள்" குறித்த கருத்தாய்வுக் குழுக் கூட்டத்தில்

1. நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தை ஒட்டிய பகுதிகளின் – பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் சிக்கல்கள் மற்றும் சவால்கள், 2. நகர்ப்புற பகுதிகளுக்குத் தேவையான சேவைகள் குறித்த அணுகல் மற்றும் தடையற்ற இணைப்பு பற்றிய மறு பரிசீலனை, 3. வீட்டுவசதி தேவை மற்றும் அடிப்படை அணுகல், 4. பசுமை கட்டிடங்களுக்கான இடஞ்சார்ந்த திட்டமிடல் ஆகியவை குறித்துக் கருத்தாய்வுக் குழுக் கூட்டம் காணொளி வாயிலான பங்கேற்பு முறையுடன் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் (முன்னர் மாநிலத் திட்டக் குழு) மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்களின் தலைமையில் 04.11.2020 அன்று காலை 11.00 மணியளவில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு காணொளி அரங்கம், எழிலகம், சென்னை–600 005ல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமை செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, முனைவர் அதுல் ஆனந்த், இஆப., உறுப்பினர் செயலர் (முகூபொ), மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, முனைவர் பு.செ. அர்ச்சனா கல்யாணி, இ.வ.ப., குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, துறைசார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் தொடக்க உரையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள், “வீடு” என்பது உணவு மற்றும் உடைக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும் என்று கூறினார். “வீடு” என்பது மனித வாழ்க்கைக்கு தங்குமிடம் மற்றும் பாதுகாப்பை வழங்குகிறது. மக்கள் தொகை மற்றும் பிற பிராணிகளின் அதிவேக வளர்ச்சி நம் நாட்டில் கடுமையான வீட்டுப் பற்றாக்குறையை உருவாக்கியுள்ளது.

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாட்டின் பெரிய மாநிலங்களில் நகரமயமாக்கலின் சதவிகிதத்தின் அடிப்படையில் 350 லட்சம் நகர்ப்புற மக்கள்தொகை கொண்ட மாநிலமாக தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 48.50 விழுக்காடு ஆகும். விரைவான நகரமயமாக்கல் தமிழகத்தின் அனைத்து நகரங்கள் மற்றும் நகரங்களில் உள்ள குடிசைப்பகுதிகளில் விரிவான வளர்ச்சியைக் கண்டுள்ளது. நகர்ப்புற குடிசைவாசிகள், பொருளாதாரத்திற்குக் கணிசமாகப் பங்களிப்புச் செய்வதுடன் நாட்டின் பிற பிரிவு மக்களுடன் சமூக உறவும் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். நகர்புற குடிசைகளானது பாதுகாப்பற்ற வீடுகளாகவும், சுகாதாரமற்ற சூழல்களின் உயர்மட்ட வறுமை, வேலையின்மைப் போன்றவற்றுடன் தொடர்புடையவையாகும். 2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி

தமிழ்நாட்டின் மொத்த நகர்ப்புற குடிசைவீடுகள் 14.63 லட்சம் ஆகும்.

மேலும், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள், நகர்ப்புற வீடுகள் பற்றி கருத்தாய்வின் நோக்கம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளை வலுப்படுத்துவதற்காகவும், மாநில அளவிலான கொள்கைளை ஆதரிக்கும் விதமாக திறமையான மற்றும் வீட்டுசந்தை வளர்ச்சியை ஊக்குவித்தல், நிறுவன சீர்த்திருத்தங்களை ஒழுங்குப்படுத்துதல், மலிவு விலையில் வீட்டுவசதி வழங்கலை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் என்று கூறினார்.

தற்போது ஏறத்தாழ 35 விழுக்காடு வீடுகள் தற்காலிகமானதாகவும், கச்சா வீடுகளாகவும் அமைந்துள்ளன. இந்தப் பற்றாக்குறை, கிராமப்புறங்களில் மேலும் அதிகமாக உள்ளது. கிராமப்புறங்களில் ஏறத்தாழ 48 விழுக்காடு வீடுகள் தற்காலிக மற்றும் பகுதி தற்காலிக கட்டிடங்களாகவே உள்ளன.

நகரப்புற மக்கள் தொகையின் தேசிய சராசரி பங்களிப்பு 31.20 விழுக்காடாகவும், தமிழகத்தில் இது 48.50 சதவிகிதமாகவும் உள்ளது. இது தேசத்தின் மிக உயரிய பங்களிப்பாகும். நகர்ப்புற குடிசை மக்கள்தொகையின் தேசிய

மக்கள்தொகை பங்களிப்பு 17.36 சதவிகிதமாகும். தமிழ்நாட்டை பொருத்தவரையில் இப்பங்களிப்பானது 16.57 சதவிகிதம் மட்டுமே ஆகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. கே. எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் ஆட்சியில் மலிவு வாடகைக்கு வீடுகளைப் பெறமுடியாத 50,096 நகர்ப்புற ஏழை குடிசைவாழ் குடும்பங்கள் அடையாறு (9539), கூவம் (14,257) மற்றும் பங்கிங்காம் கால்வாய் (26,300) போன்ற ஆற்றங்கரைகளில் ஆக்கிரமித்துள்ளனர். அவற்றில் 16,224 குடிசைவாழ் குடும்பங்கள் இதுநாள் வரையில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். மீள்குடியேற்ற திட்டத்தின் கீழ் மொத்தம் 29,864 குடியிருப்புகள் (எழில்நகர் ஒடிபி (6000), பெரும்பாக்கம் (20376), ஒரகடம் – நாவலூர் (2,048), திருமழிசை – கூடப்பாக்கம் (1,024), திருவெற்றியூர் – இந்திய வானொலி நிலம் மீள்குடியேற்ற திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளன.

30 ஆண்டுகளுக்கு மேல் கட்டப்பட்ட குடியிருப்புகள் வளிமண்டல பாதிப்புகள் காரணமாக பாழடைந்து வருகின்றன. சென்னையில் நடந்த சுனாமி பேரழிவினால் தங்கள் குடிசைகளை இழந்த குடும்பங்களுக்கு உலக வங்கி நிதியளித்த அவசர சுனாமி புனரமைப்பு திட்டத்தின் கீழ் குடியிருப்புகள் கட்டப்பட்டு மீள்குடி அமர்த்தப்பட்டனர். இக்குடும்பங்களுக்கு 6292 குடியிருப்புகள் திருவெற்றியூர் – இந்திய வானொலி நிலம் (3616), நொச்சிநகர், மெரினா (628),

ஒக்கியம் துரைப்பாக்கம் (2048) ரூ.284.49கோடி செலவில் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட கூடிய பகுதிகளில் வசிக்கும் குடிசைவாழ் குடும்பங்களுக்கு ராஜிவ்காந்தி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் (தொகுப்பு 1 மற்றும் 2) இந்திய அரசின் நிதியுதவியைப் பயன்படுத்தி தனி வீடுகள் அல்லது மீள்குடியிருப்புகள் வழங்கப்பட்டன. இக்குடும்பங்களுக்கு 6620 தனி வீடுகள் மற்றும் குடியிருப்புகள் ரூ.234.97கோடி செலவில் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களால், பிரதம மந்திரி குடிசையில்லா நகரமாக மாற்றும் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் மொத்தம் 2,42,449 குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

மாண்புமிகு மாநில வளர்ச்சிக் குழுவின் துணைத் தலைவர் அவர்கள், நிலையான நகரவளர்ச்சிக்கான சவால்கள், சுற்றுச்சூழல், பொருளாதாரம், சமூகம் மற்றும் நிறுவனம் என நான்கு பரிமாணங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

நகர்ப்புற திட்டமிடலில் நிலையான வளர்ச்சிக்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கினால் மட்டுமே நிலையான வளர்ச்சி

தொடர்பான பிரச்சனைகள், சவால்கள் போன்றவற்றை திறம்பட கையாள முடியும்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் நகர்ப்புறத் துறையில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் சவால்கள் அவற்றை எதிர்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து திறம்பட விளக்கிய முனைவர். ஆர். சுஜாதா, திருமதி. யூ. மணிமேகலை, முனைவர். கரன் கொய்லோ, மற்றும் முனைவர். பிரதீப் மோஸஸ் அவர்களைப் பாராட்டினார்.

திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமை செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அவர்கள் கருத்து கூறுகையில், வீட்டுத் திட்டங்கள் அனைத்தும் காலநிலை மாற்றம் உள்ளிட்ட அம்சங்களை உள்ளடக்கியுள்ளதா என ஆராய வேண்டும். கடல் மட்டம் அதிகரித்து வருகிறது, 2050ற்குள் கடலோர பகுதிகளில் வாழும் மக்கள் மேடான இடங்களுக்குக் குடிபெயர வேண்டும் என்று ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. காற்றோட்டம் காற்றின் திசையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். குறுக்குக் காற்றோட்டம் குளிர்பதனப் பெட்டியின் பயன்பாட்டினைக் குறைக்கும். பசுமைக் கட்டிடங்களை அமைப்பதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அனைத்து அம்சங்களிலும் பசுமை கட்டிடங்கள் இருப்பின் அதாவது கூரை மேல் தோட்டங்கள் அல்லது திறந்தவெளிகளில் அடர்காடுகள் (மியாவாக்கி) போன்ற அம்சங்கள் இருப்பின்

சொத்துவரி மதிப்பீட்டில் குறைப்பு அல்லது மானியத்திற்காகக் கருதப்பட வேண்டும். இது காலநிலை மாற்றத்திற்கான பங்களிப்பின் விளைவைக் குறைக்கும்.

கருத்தரங்கின் முடிவுரையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி.பொன்னையன், அவர்கள் எடுத்துரைத்த விபரம் பின்வருமாறு:

குடிசைகளில் வசிக்கும் பெண்கள் வீட்டு வேலைக்குச் செல்கிறார்கள், அவர்கள் நகரின் மையத்தில் அமைந்துள்ள வீடுகளில் பணிபுரியும் முக்கிய தொழிலாளர் சக்தி என்று மாண்புமிகு துணைத்தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தெரிவித்தார். இந்த மக்கள் தற்போதுள்ள இடத்திலிருந்து வெகுதொலைவில் உள்ள இடங்களுக்கு குடிபெயரும்போது, அவர்கள் எவ்வாறு வேலைக்கு வரமுடியும். போக்குவரத்து செலவு அதிகமாகிறது, உரிய நேரத்திற்குள் வருவது போன்ற குறைகள் இந்த மக்களின் மனதில் உள்ளது. மேலும், இவர்களுக்கு இடமளிக்க 2,3 அல்லது 4 மாடி கட்டுமானத்தை வழங்க முயற்சிக்க வேண்டும், இதற்கு உதாரணமாக திருவொற்றியூரில் பல அடுக்குமாடி கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது. தனியார் துறைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் அரசாங்க கட்டுமானங்களிலும் பின்பற்றப்பட வேண்டும். நகர்ப்புற குடிசைவாழ் மக்களுக்கு புறநகர் பகுதிகளில் குடியிருப்புகளை

வடிவமைக்க முடியும். ஆட்சேபனைக்குரிய நிலங்களை ஆக்கிரமிக்கும் நபர்கள் மேல் கடுமையான நடவடிக்கை தொடரப்பட வேண்டும். இதேபோல் 2வது, 3வது குடியிருப்பு ஒதுக்கீடு ஒரு நபர் பெறுவது குற்றம். மேலும், அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பராமரிப்புப் பணிகளை குடியிருப்பாளர்கள் நலச் சங்கத்திடம் ஒப்படைப்பது குறித்தும் அதற்கு தேவையான மூலதனத்தை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியமோ அல்லது அரசாங்கமோ மானியமாக வழங்கலாம் என கூடுதல் தலைமை செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சி அவர்கள் சிறந்த ஆலோசனையை வழங்கியுள்ளார், இந்த வழிகளில் மாண்புமிகு துணை முதலமைச்சர் மூலமாக அரசாங்கத்திற்கு ஒரு பரிந்துரையை அனுப்பலாம் என மாண்புமிகு துணைத்தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் கூறினார்.

மேலும், கட்டுமானத் துறையில் ஜி.எஸ்.டியின் சதவீதம் ஒரு சுமையாக உள்ளது, இதைக் குறைக்க தமிழக அரசு இந்திய அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும். பொருளாதார ரீதியாகப் பலவீனமாகப் பிரிவினருக்கான 14% வங்கி வட்டி வீதமும் மிகவும் சிரமமானது. தேதிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் கீழ் நிதியளிப்பதற்காக இந்தப் பிரிவினருக்கு உதவ அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யலாம்.

காற்றின் திசையை அடிப்படையாகக் கொண்ட குறுக்குக் காற்றோட்டம் குறித்து கூடுதல் தலைமை செயலாளர், திட்டம்

மற்றும் வளர்ச்சித் துறை பரிந்துரைத்த கருத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் செயல்படுத்த வேண்டும். இதேபோல் மாதிரி பசுமை வீடுகளை முன்னோடி அடிப்படையில் உருவாக்க வேண்டும். அவை மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு மூலம் செயல்படுத்தலாம் என மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு மாண்புமிகு துணைத்தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சீரிய ஆட்சியில் 2023 இலக்கினை (Vision 2023) அடையும் ஒருபகுதியாக 2023க்கு முன்னர் நகர்புற ஏழை மற்றும் குடிசைவாழ் குடும்பங்களுக்காக 13.91 லட்சம் குடியிருப்புகள் / வீடுகளை நிர்மாணிக்கவும் தமிழகத்தை குடிசைகளற்ற நகரமாக அறிவிக்கவும் குடிசையில்லா நகரமாக மாற்றும் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டமானது, பிரதம மந்திரி குடிசையில்லா நகரமாக மாற்றும் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் மானியங்கள், நிறுவன நிதி மற்றும் பயனாளிகளின் பங்களிப்பை பயன்படுத்தி செயல்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேற்படி திட்டம், 666 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள்

மற்றும் 2 கண்டோன்மென்ட்கள்) செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரதம மந்திரி குடியிருப்பு ஊரகத் திட்டத்தின் கீழ் 2016 17 முதல் 2019 20 வரை 5,27,552 வீடுகள், ரூ.5,170.01 கோடி மாநில அரசின் பங்குத் தொகையுடன் மொத்தம் ரூ.8,968.38 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960 என்ற சட்டத்தினை நீக்கி, தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், 2017 என்ற புதிய சட்டத்தை சட்டமன்றத்தில் கொண்டுவந்தது. இச்சட்டத்தின்படி அனைத்து வாடகை ஒப்பந்தங்களும் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும். தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், பிப்ரவரி 22, 2019 முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு கே. எடப்பாடி பழனிச்சாமி அவர்களால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. மேலும், தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் விதிகள், 2019–க்கு அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் வெளியிட்டார்.

முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் தமிழக அரசின் முன்னோடி திட்டங்களில் ஒன்றாகும். கிராமப்புறங்களில் வீட்டு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பசுமை எரிச்சக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே இந்த வகையில் செயல்படுத்தப்படும் முதல் திட்டமாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் முதல் திரு. கே. எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் ஆட்சிக்காலத்தை தொடர்ந்து **2011–12**ஆம் ஆண்டு முதல் **2019–20**ஆம் ஆண்டு வரை மொத்தம் **3.80** இலட்சம் பசுமை வீடுகள் ரூ.**7.620** கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

கருத்தரங்கின் முடிவுரையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி.பொன்னையன், அவர்கள் நீடித்த நிலைத்த வளர்ச்சியின் **11–**ஆம் இலக்கினை **2030–**ற்குள் அடைய துறைகளின் மத்தியில் ஒருங்கிணைப்பு மிக முக்கியம் எனத் தெரிவித்தார்.

உறுப்பினர் செயலர் (முகூபொ)
மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**